உலக பெண்கள் பேரவை மாநாட்டு ஏற்பாடுகளை செய்துள்ள அமீரக பெண்கள் குழுவுடன் துபாய் பட்டத்து இளவரசர் மேதகு ஷேக் ஹம்தான் பின் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் உள்ளார்.

துபாயில், உலக பெண்கள் பேரவை மாநாடு தொடங்கியது

பட்டத்து இளவரசர் பங்கேற்பு

துபாய், பிப்.24–

துபாயில் உலக பெண்கள் பேரவை மாநாடு நேற்று தொடங்கியது. இதில் பட்டத்து இளவரசர் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர்.

பெண்கள் பேரவை மாநாடு

உலக பெண்கள் பேரவையின் 2 நாள் மாநாடு துபாய் ஜுமைரா பகுதியில் உள்ள மதினத் ஜுமைரா ஓட்டலில் நேற்று தொடங்கியது. துபாய் பட்டத்து இளவரசர் மேதகு ஷேக் ஹம்தான் பின் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர். துபாயில் பெண்கள் சமூகத்துக்கும், பொருளாதார மேம்பாட்டுக்கும் எந்த வகையில் பங்காற்றி வருகின்றனர் என்பதை தெரிவிக்கும் விதமாகவும், அவர்களது திறமைகளை ஊக்கப்படுத்தும் வகையிலும் இந்த மாநாடு நடக்கிறது.

பெண்களுக்காக சிறப்பான சேவைகள் புரிந்த ஜோர்டான் நாட்டின் இளவரசி ராணியா அல் அப்துல்லா, சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குனர் கிரிஸ்டின் லகார்டே உள்ளிட்டோருக்கு துபாய் பட்டத்து இளவரசர் மேதகு ஷேக் ஹம்தான் பின் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் விருதுகளை வழங்கினார்.

மகிழ்ச்சி அளிக்கிறது

மாநாட்டில் ஜோர்டான் நாட்டின் இளவரசி ராணியா அல் அப்துல்லா பேசும் போது, "அமீரகத்தில் இத்தகைய விருது கிடைத்திருப்பதை மிகப்பெரும் கவுரவமாக கருதுகிறேன். அமீரக மக்களின் வரவேற்பு எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்துள்ளது" என்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குனர் கிரிஸ்டின் லகார்டே பேசும் போது" அமீரகத்தில் பெண்களின் திறமைகள் சிறப்பான வகையில் ஊக்கப்படுத்தி வருவது பாராட்டுக்குரியது. இதற்கு உறுதுணையாக இருந்து வரும் அமீரக தலைவர்களை பாராட்டுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

முக்கிய பிரமுகர்கள்

இந்த மாநாட்டில் சிலி நாட்டின் அதிபர் மிசில்லி பசெல்லெட், மொரீசியஸ் நாட்டின் அதிபர் அமினா குரிப் பகிம், அமீரக வெளியுறவுத் துறை மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான மந்திரி ஷேக் அப்துல்லா பின் ஜாயித் அல் நஹ்யான், சர்வதேச ஒத்துழைப்புக்கான மாநில மந்திரியும், எக்ஸ்போ 2020 கண்காட்சி குழுவின் இயக்குனர் ஜெனரலுமான ரீம் பிந்த் இப்ராகிம் அல் ஹாஷிமி, சகிப்புத்தன்மைக்கான மந்திரி ஷேக்கா லுப்னா பிந்த் அல் காலித் அல் காசிமி, மத்திய தேசிய கவுன்சில் சபாநாயகர் டாக்டர் அமல் அப்துல்லா அல் குபைசி உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர்.

மாநாட்டில் கருத்தரங்குகள், விவாதங்கள், கண்காட்சிகள் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. மேலும் மாநாட்டில் சர்வதேச நாடுகளை சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

அமீரகத்தை சேர்ந்தவர்கள்

லெபனான் பயணம் செய்ய தடை

அபுதாபி, பிப்.24–

அமீரகத்தில் இருந்து லெபனான் நாட்டுக்கு பயணம் மேற்கொள்பவர்கள் ஏற்கனவே எச்சரிக்கையுடன் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. தற்போது அந்த நாட்டுக்கு பயணம் மேற்கொள்ள முழுவதும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தடை நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் ஏற்பட்டுள்ள விரிசலை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. எனினும் தூதரக உறவுகள் மிகவும் கீழ்மட்ட அளவிலேயே தொடர்ந்து வருகின்றன என்று அமீரக வெளியுறவு மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான துறை வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

துபாயில், ஓட்டலில் தீ விபத்து

துபாய், பிப்.24–

துபாய் மெடோஸ் டவுண் சென்டரில் ஒரு ஓட்டலில் நேற்று காலை தீ விபத்து ஏற்பட்டது. அந்த ஓட்டல் இறப்பதற்கு முன்பு அங்குள்ள சமையல் அறையில் திடீரென தீ பிடித்தது. சிறிது நேரத்தில் தீ மளமளவென பரவியது. ஓட்டலுக்கு வெளியே புகைமண்டலம் வெளியேறியது.

இதனை அந்த வழியாக சென்றவர்கள் கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனே அவர்கள் இதுகுறித்து தீயணைப்பு படையினருக்கும், போலீசுக்கும் தகவல் அளித்தனர். இதன் பேரில் சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்புப் படையினர் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர்.

அமீரகத்தில் இன்று மழைபெய்ய வாய்ப்பு

வானிலை ஆய்வுமையம் தகவல்

அபுதாபி, பிப்.24–

அமீரகத்தில் பனியும், மழையும் மாறி மாறி வாட்டிவதைக்கிறது. இதனால் நடந்து செல்பவர்கள் மற்றும் வாகன ஓட்டிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் காலநிலை மாற்றத்தின் காரணமாக அமீரகத்தில் பல்வேறு பகுதிகளில் இன்று (புதன்கிழமை) லேசான மழை பெய்யக்கூடும். குறிப்பாக அமீரகத்தின் மேற்கு பிராந்தியத்திலும், கடலோர எல்லைப் பகுதிகளிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

அதிகாலை நேரங்களில் மூடுபனி ஏற்படும் என்பதால் குறைவான அளவு தூரத்தையே பார்க்க முடியும். எனவே வாகன ஓட்டிகள் எச்சரிக்கையுடன் செல்ல வேண்டும். அமீரகப்பகுதிகளில் வெப்பநிலையை பொறுத்தவரையில் அதிகபட்சம் 34 டிகிரி செல்சியசும், குறைந்தபட்சம் 7 டிகிரி செல்சியசும் இருக்கும். மேலும் கடலோரப்பகுதிகளில் வெப்பநிலை 14 டிகிரியில் இருந்து 32 டிகிரி செல்சியசாகவும் இருக்கும். அரேபியன் வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடா பகுதிகளில் கடலில் சீற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓமனில் இந்தியர்களின் வாழ்க்கைத்தரம் சிறப்பாக இருக்க தூதரகம் முயற்சி

இந்திய தூதர் இந்திரமணி பாண்டே பேச்சு

மஸ்கட், பிப்.24–

ஓமனில் இந்தியர்களின் வாழ்க்கைத்தரம் சிறப்பாக இருக்க இந்திய தூத

சார்ஜாவில் நடந்த சிறப்பு கருத்தரங்கில் பங்கேற்ற சத்தீஷ்கார் மாநில வர்த்தக மற்றும் தொழில்துறை மந்திரி அமர் அகர்வால், எக்ஸ்போ சென்டரின் தலைமை செயல் அலுவலர் சைப் முகம்மது அல் மித்பா மற்றும் இந்திய வர்த்தகர்களை படத்தில் காணலாம்.

சார்ஜாவில்

முதலீட்டு வாய்ப்புகள் குறித்த சிறப்பு கருத்தரங்கு

சார்ஜா, பிப்.24–

சார்ஜாவில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்த சிறப்பு கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கு

சார்ஜா எக்ஸ்போ சென்டரில் பிளாஸ்டிக், பிரிண்டிங், மோல்டு மேக்கிங் உள்ளிட்ட 3 கண்காட்சிகள் நடந்து வருகின்றன. இந்த கண்காட்சியின் ஒரு பகுதியாக முதலீட்டு வாய்ப்புகள் குறித்த சிறப்பு கருத்தரங்கு நடைபெற்றது.

இந்த கருத்தரங்குக்கு எக்ஸ்போ சென்டரின் தலைமை செயல் அலுவலர் சைப் முகம்மது அல் மித்பா தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறும் போது, "அபுதாபி பட்டத்து இளவரசரும், அமீரக ஆயுதப் படைகளின் துணை சுப்ரீம் கமாண்டரும், அபுதாபி நிர்வாக கவுன்சில் தலைவருமான மேதகு ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் சமீபத்தில் மேற்கொண்ட இந்திய பயணத்தை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவுகள் மேலும் அதிகரித்துள்ளது'' என்று தெரிவித்தார்.

சத்தீஷ்கார் மந்திரி

சத்தீஷ்கார் மாநில வர்த்தக மற்றும் தொழில்துறை மந்திரி அமர் அகர்வால் இந்த கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்திய வர்த்தகர்கள் அமீரகத்தில் சிறப்பான முறையில் தொழில் தொடங்க ஆதரவு அளித்து வரும் அமீரக அரசுக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

அதைத்தொடர்ந்து அங்கு நடந்த கண்காட்சியினை பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் இந்திய துணைத் தூதரக அதிகாரி கே. முரளீதரன், இந்திய வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

துபாய் இந்திய துணைத்தூதரகத்தில் நடந்த திறன்மிகு இந்தியா சிறப்பு நிகழ்ச்சியில்